RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2632

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

Caste Oppression and Cultural Resistance in Tamil and Malayalam Dalit Folk Songs

Preetha S [a, *]

[a] Department of Tamil, University College, Palayam, Thiruvananthapuram-695034, Kerala, India

*Corresponding author Email: freedatutty@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2632

Received: 13-05-2026; Revised: 23-08-2026; Accepted: 30-08-2026; Published: 08-09-2026

Abstract: Tamil and Malayalam folk songs constitute significant forms of oral literature that preserve the lived experiences, labour, suffering, joys, and social struggles of ordinary people. Among these traditions, Dalit folk songs hold particular significance as expressions of the everyday experiences and collective memories of historically oppressed communities. These songs extend beyond entertainment and function as powerful cultural expressions of pain, resistance, the assertion of rights, and the aspiration for social liberation. They give voice to communities whose experiences and perspectives have often been excluded from dominant literary and historical narratives. This study examines the voices of resistance articulated in Dalit folk songs from Tamil Nadu and Kerala, focusing on their representation of social history, cultural memory, identity, and collective struggle. Particular attention is given to themes such as agricultural labour, wage-based livelihoods, caste-based oppression, poverty, untouchability, and gender inequality. The study also explores how these songs transform experiences of suffering into expressions of protest, self-respect, collective consciousness, and the demand for social equality. Through a comparative examination of Tamil and Malayalam folk traditions, it investigates the ways in which Dalit communities preserve their historical experiences and transmit their cultural memories across generations through oral performance and song. The study argues that Dalit folk songs are not merely records of social suffering but also significant forms of cultural resistance and emancipatory expression. They challenge caste-based hierarchies, question social injustice, and articulate aspirations for dignity, equality, and social transformation. Thus, Tamil and Malayalam Dalit folk traditions serve as important repositories of subaltern knowledge and collective identity, demonstrating the role of oral literature in preserving marginalized histories and advancing the discourse of social justice.

Keywords: Tamil folk songs, Malayalam folk songs, Tamil and Malayalam Dalit folk traditions, Social Justice

Language: **Tamil**

தமிழ் - மலையாள நாட்டுப்புறப் பாடல்களில் தலித் மக்களின் கலகக் குரல்கள்

பிரிதா செ [அ, *]

[அ] தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி, திருவனந்தபுரம்-695034, கேரளா, இந்தியா

முன்னுரை

தமிழ் மற்றும் மலையாள நாட்டுப்புறப் பாடல்கள் என்பது மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும், உழைப்பையும், துயரங்களையும், மகிழ்ச்சியையும், சமூகப் போராட்டங்களையும் இயல்பாகப் பதிவு செய்யும் வாய்மொழி இலக்கிய வடிவமாகும். குறிப்பாக, தலித் மக்களின் நாட்டுப்புறப் பாடல்கள் அவர்களின் அன்றாட வாழ்க்கை அனுபவங்களிலிருந்து உருவானவை. இப்பாடல்கள் வெறும் பொழுதுபோக்கிற்கான பாடல்கள் அல்ல, சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வலி, எதிர்ப்பு, உரிமை உணர்வு மற்றும் விடுதலைக்கான ஏக்கத்தை வெளிப்படுத்தும் "கழகக் குரல்கள்" எனக் கருதத்தக்கவை.

தமிழகத்திலும் கேரளத்திலும் வாழும் தலித் சமூகங்களின் நாட்டுப்புறப் பாடல்கள், அவர்களின் சமூக வரலாற்றையும் பண்பாட்டு நினைவுகளையும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தி வருகின்றன. வயல்வெளி உழைப்பு, கூலி வாழ்க்கை, சாதிய ஒடுக்குமுறை, வறுமை, தீண்டாமை, பாலினச் சமத்துவமின்மை போன்ற பல்வேறு வாழ்வியல் சூழல்கள் இப்பாடல்களில் வெளிப்படுகின்றன.

அதேவேளையில், துயரத்தை மட்டும் பதிவு செய்யாமல், அநீதிக்கு எதிரான குரலையும், சுயமரியாதையையும், சமூக மாற்றத்திற்கான விழிப்புணர்வையும் இப்பாடல்கள் முன்னிறுத்துகின்றன.

தமிழ் மலையாள நாட்டுப்புறப் பாடல்களின் வழியாக அறியப்படுகின்ற மனித சமுதாயம் பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த அடித்தளப் பெண்களின் எதிரொலியாக அமைகின்றன.அடிமை முறை காலகட்டத்தில் பெண்கள் காம இச்சையைத் தீர்ப்பதற்கு உண்டானவர்கள், ஆதிக்க வர்க்கத்தினரிடம் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த இயலாதவர்கள் என்கிற நிலையில் இவர்களின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது.இக்காலங்களில் பதிவு செய்யப்பட்ட நாட்டுப்புறப் பாடல்கள் தீண்டாமை மற்றும் பாலியல் கொடுமைகளுக்கு எதிரான குரலாக அமைகின்றன.வாய்மொழி பாடல்களின் வழியாகத் தங்களின் எதிர்ப்பை பதிவு செய்யும் ஒரு வழிமுறையாகவும், வரலாறாகவும் இப்பாடல்கள் அமைந்திருக்கின்றன, அடித்தளமக்களை மலையாள மொழியில் அடியாளப் பெண்கள் என்றும் அடியாளத்தி பெண்கள் என்றும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். அடித்தள மக்கள் என்பதற்கான விளக்கமாக ஆ. சிவசுப்பிரமணியன் குறிப்பிடும்போது "மேட்டிமைக் குழுவிற்கு நேர்மாறாக எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும் சமுதாயத்தின் வளங்களில் உரிய பங்கு பெற முடியாதவர்களாகவும் குறைந்த அளவு உணவு, குறைந்த அளவு உடை, கல்வி பெற்று வாழும் மக்கள் பிரிவினரை அடித்தள மக்கள் எனப்படுகின்றனர்" என்று விளக்கம் அளிக்கிறார் (Sivasubramanian, 2016). தொழிற்களங்களில் இவர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பாலியல் சுரண்டல்களாகவும், உழைப்பு சுரண்டல்களாகவும் நீள்கின்றன. அடித்தள மக்கள் சுரண்டப்படும் நிகழ்வுகளை நாட்டுப்புறப்பாடல்கள் பதிவு செய்கின்றன.

நம் இந்தியச் சூழலில் அடித்தள மக்கள் என்பதற்குச் சாதி, சமயம், தொழில், அரசியல் ஆதிக்கம், பாலியல் நிலை, பொருளாதார நிலை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் அல்லது அனைத்து நிலைகளிலும் தாழ்ந்திருக்கும் மக்கள் என ஓர் எளியவரையறை செய்யலாம்.இவ் வரையறையைக் கொண்டே நாட்டுப்புறப்பாடல்களையும் ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

பெண்களின் மீதான பாலியல் சுரண்டல்

பர்மா (மியான்மர்) நாட்டிற்குத் தோட்டத் தொழிலாளியாகச் சென்று திரும்பிய பெண்ணின் குரலில் வெளிப்படும் வரிகள்,

"ராத்திரி வேலைக்கு ராச்சம் பளம் வேறே

ராசா என் டங்கள்துரை

சேர்த்துக் கொடுத்தாலும் சேட்டை பண்ணுவாரே

சின்னப் பெண்ணைக் கண்டுவிட்டால்

காலுச்சட்டைப் போட்டுக் கையை உள்ளே விட்டுக்

கண்ணை நல்லாச் சிமிட்டிக்

கங்காணிமாரை தான் கைக்குள்ளே தான் போட்டுக் காசுகளை யிறைச்சி

காடுண்ணு மில்லை மேடுண்ணு மில்லை

வீடுண்ணும் இல்லையம்மா

கண்ட இடமெல்லாம் கண்ட கண்ட பெண்ணைக் கையைப் பிடிச்சிழுப்பார்" (Sivasubramanian, 2016)

இப்பாடல் வெளிப்படுத்தும் வரலாற்று உண்மையை வரலாற்று ஆவணங்கள் பதிவு செய்யவில்லை. நாட்டுப்புறப்பாடல்கள் அடித்தள மக்களின் உள்ளக் குமுறல்களைப் பதிவு செய்துள்ளன.

உழைப்பும் சுரண்டலும்

"நேரம்போய் நேரம் போய்

பூக்கைத மறப்பற்றி

குந்தகோழி குளக்கோழி

தத்தி தத்தி சாடுந்தே

முந்நாழி கள்ளும் தந்து

கொல்லா கொல கொல்லுந்தே

ஒரு தொண்டு கரிக்கும் தந்து

கொல்லா கொல கொல்லுந்தே" (Kumaran Vayaleri, 2003)

என்னும் பாடலில் தலித் பெண்கள் காலைப்பொழுதிலிருந்து மாலை நேரம் வரை வேலை செய்கின்றனர். விவசாயக் கூலிகளான இவர்கள் வேலை நேரம் முடிந்தும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப இயலாமல் தவிக்கும் நிலையை இப்பாடல் பதிவு செய்கிறது. பெண்கள் காலைப் பொழுதிருந்து மாலை நேரம் வரை வேலை செய்கின்றனர். மேலும் சிறிது மதுவும்(கள்) இளநீரும் மட்டுமே இவர்கள் உணவாக உட்கொண்டு வேலைப்பளுவை தாங்கிக் கொண்டார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளக் குமுறல்

அதிகாலையில் தொழிற்களங்களுக்குச் செல்லும் நிகழ்வை பதிவு செய்யும்போது,

"நேரம் வெளுத்தில்லா

செங்கல்லு விட்டில்லா

நெய்யுறும்பு வழி வச்சில்லா

காட்டு சிலந்தி வல நூத்தில்லா

பூக்கா தெற்றி விடர்த்ததுமில்லா" (Kavalam Vishwanatha Group, 1989)

என்று பதிவிடப்பட்டுள்ளது. இவ்வாறு சூரியன் உதிக்கும் முன்பே வேலைக்கு அமர்த்தப்படும் இவர்கள் சூரியன் மறையும் வரை அடிமையாகத் தொழிற் களங்களிலிருந்து மீண்டு கரை ஏற முடியாத நிலை இங்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உழைப்பு இவ்வடித்தள மக்களுடையதாக இருந்தாலும் லாபம் காண்கிறவர்கள் முதலாளிகளாக இருக்கிறார்கள். இவர்களின் நிலையை "இத்தாலிய நாட்டு கிராம்ஸ்கியின் மொழியில் குறிப்பிடுவதானால் விளக்கின் ஒளியைப் பெறுபவர்களை "மேட்டிமையர்" என்றும் விளக்குத் தண்டு போன்றவர்களை "அடித்தள மக்கள்" என்றும் குறிப்பிடலாம் என்கிறார்" (Sivasubramanian, 2016). (அடித்தள மக்கள் வரலாறு (ப.எண் -33) அடித்தள மக்கள் என்றழைக்கப்படும் தலித் மக்கள் பாரம்பரியமாக வேளாண்மை தொழில் செய்து வருகின்றனர். இம்மக்கள் நிலவுடைமையாளர்களின் உழைப்பு சுரண்டலுக்கு ஆளாக்கப்படும் நிகழ்வை நாட்டுப் புறப்பாடல்கள் பதிவு செய்கின்றன.

உழைப்பும் வறுமையும்

உழைத்தும் உழைப்பின் பலன் கிடைக்காமல் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

"கானுக செரு வேடனே ரய்யோ

ஓரேணி கோரிச்சாரியே ரய்யோ

ஆதிவசோம் பட்டினியே ரய்யோ

வயலெல்லாம் சேறு நிரச்சே ரய்யோ

கண்டோலாம் பூட்டியடிச்சே ரய்யோ

மரம் பிடிச்சு நடு முறிஞ்ஞே ரய்யோ

ஆ திவசோம் பட்டினியே ரய்யோ

தோடு வெட்டி தெளிச்சதே ரய்யோ

மழவெள்ளம் தடஞ்ஞதே ரய்யோ

வெள்ளமெல்லாம் தேவியே ரய்யோ

பத்துபரையும் பூட்டியடிச்சே ரய்யோ

வித்து வாரி எறிந்தே ரய்யோ

ஒரு மணி நெல்லு தந்தில்லே ரய்யோ

ஆ திவசோம் பட்டினியே ரய்யோ"

காலையிலிருந்து மாலை நேரம் வரை வேலை செய்து கூழும் (உணவு) தண்ணீரும் கிடைக்கவில்லை. தொட்டிலில் உறங்க வைத்த பிள்ளை துடித்து அழுதும் வேலை முடித்து வீடு செல்ல முடியாத நிலையில் அமைந்த தமிழ் நாட்டுப்புறபாடலும் மேற்கண்ட வரிகளை நினைவுபடுத்துகின்றன.

வயற்காட்டில் உழுதும், ஏற்றம் இறைத்தும் ,உரம் இட்டும், மடை திறந்தும்,மழை நீரை சேமித்தும், விதை நெல் விதைத்தும் அறுவடை செய்து நிற்கும் விவசாயக் கூலிகள் பசி,பட்டினியை அனுபவிக்கும் நிலை இங்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அடித்தள மக்களில் பெரும்பாலானோர் செய்யும் தொழிலாளால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இவ்வரிகள் உழவுத் தொழில் செய்யும் இவ்விவசாயக் கூலிகளின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது இவ் வரிகள்.பிறர் நிலத்தில் உழைத்தவன் உலக்கு நெல்லு கூட மிஞ்சாமல் குத்தகை வரும் என்று கொடுத்துவிட்டு வாழ்க்கையில் துன்பப்படுகிறான். நிலம் உள்ளவர்கள் வாழ கூலி வேலை செய்து உழைத்துப் பணம் பெற்று கஞ்சிக்குக் கூடத் துன்பப்படும் நிலை உள்ளது (நாடு போற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் ப.333) ஏர் ஒட்டிக்கொண்டு இருக்கும் பொழுது குடை பிடித்துப் பண்ணையார் வருகிறார் பண்ணையார் வருவதைக் காளைகளுக்கு உணர்த்தி வேகமாக நடக்கச் செய்கிறான் (நாடு போற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் - பக்-74) என்று வரிகளில் பதிவாக்கியுள்ளனர்

“காடு விளஞ்சென்ன மச்சான் - நமக்கு

கையும் காலும் தானே மிச்சம்” (Balakrishnan, 1996)

என்னும் பட்டுக்கோட்டையாரின் வரிகளை இந்நாட்டுப்புறப் பாடல் வெளிப்படுத்துகிறது.பிஜித் தீவில் இந்தியர்கள் படும் அவல நிலையைக் கண்டு பாரதியார் நெஞ்சங்குமுறுகிறார்

“பெண்ணென்று சொல்லிடிலோ - ஒரு பேயுமிரங்கு மென்பார் தெய்வமே - நின தெண்ண மிரங்காதோ - அந்த ஏழைக ளங்கு சொரியுங் கண்ணீர் வெறும் மண்ணிற் கலந்திடுமோ - தெற்கு மாகடலுக்கு நடுவினிலே யங்கோர் கண்ணற்ற தீவினிலே - தனிக் காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றா ரந்தக், கற்பு நீங்கிடச் செய்யும் கொடுமையிலே யந்தப் பஞ்சை மகளிரெல்லாம் - துன்பப் பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு தஞ்சமு மில்லாதே - அவர் சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில் மிஞ்ச விடலாமோ? ஹே! வீர் கராளி! சாமுண்டி காளி!!” (Meyyappan, 2010)

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நிலை உணர்த்தும் பாடலொன்றில்,

“ஆராரோ.... ஆரிரரோ -என் கண்ணே.....!

ஆரடிச்சி நீ அழுதாய் -கண்ணே ...நீ

அடிச்சாரை சொல்லி அழு...!

சீரான சீமை விட்டு....

சீரழியக் காடு வந்தோம்.....

கூடை தலை மேலே

குடி வாழ்க்கை கானகத்தில்

காடு மலைகளிலே....

கரடி ,புலி, ஆனை, சிங்கம்

கூடி வாழுமிந்த...

கொடு வனத்தே... நித்திரை போ!” (Sivalingam, 2007)

(தேயிலைக் காடுகளில் மரங்களில், தொட்டில் கட்டி, குழந்தைகளைத் தூங்க வைத்துவிட்டு, கொழுந்து கொள்வது ஆரம்பக் கால வழக்கமாக இருந்தது. துரதிஷ்டவசமாகத் தேனி, குழவி வண்டுகளுக்கும், மிருகங்களுக்கும், விரியன், புடையன், மலைப் பாம்புகளுக்கும் தொட்டில் குழந்தைகள் பலிபோன துயரச் சம்பவங்கள் ஏராளம் நிகழ்ந்திருக்கின்றன) இவ்வாறு ஒடுக்கப்பட்டோரின் குரல்கள் இங்குக் கலகக்குரலாகப் பதிவுச்செய்துள்ள நிலைமையை காண முடிகிறது.

எதிர்ப்பின் குரல்

ஒடுக்கப்பட்ட மக்களின் பாலியல் சுரண்டல்களுக்கு முடிவு கட்டும் விதமாக மலபாரில் கிழக்கிந்திய கம்பெனி வெளியேறிய போது அங்குள்ள அடிமைகளும் விடுதலையானார்கள்.குறுநில மன்னர்களின் கீழ் உள்ள அடிமைகளுக்கு எதிரான துரோகங்களை ஆங்கிலேய அரசாங்கம் எல்லைக்குக் கொண்டு வந்தது. 1972 - இல் அடிமை வியாபாரம் ஒழிக்கப்படுவதற்கான முதல் விளம்பரத்தை ஆங்கில அரசாங்கம் அறிவித்தது. இதன் பிரதிபலிப்பாக அப்புலையப் பெண் தம்புரானிடம் தன் எதிர்ப்பை தெரிவிக்கிறாள்.

“பத்துபற கண்டத் தின்றே

தல புலியாணேய்

சந்தம் நோக்காதே

சரி ரம் நோக்காதே

நேரம் நோக்கணம்

என்றே கொச்சம்பிரான் “

(கிளிமானூர் சந்திரன் - தெரஞ்ஞெடுத்த நாடன்பாட்டுகள் ப.19)

திருவனந்தபுரம் பகல்கூறிபையவேலி என்னுமிடத்தைச் சேர்ந்த புலையச்சமுதாயத்தைச் சேர்ந்த பெண் கோமதி என்பவர் 1977-இல் பாடிய இப்பாடல் எதிர்ப்பின் குரலாக அமைந்திருக்கிறது. நாட்டுப் புறப்பாடல்கள் காலத்தின் குரலைப் பதிவு செய்யும் பெட்டகமாகத் திகழ்கின்றன. ஆரம்பக்காலங்களில் அடங்கிப் போகும் நாட்டுப்புறப்பாடல் பதிவாகவும், பிற்காலங்களில் எதிர்ப்பின் பதிவாகவும் நின்று காலக்கண்ணாடியாக விளங்குகின்றன.

முடிவுரை

தமிழ்-மலையாள தலித் நாட்டுப்புறப் பாடல்களை ஒப்பீட்டு நோக்கில் அணுகுவது, இரு மாநிலங்களின் நாட்டுப்புறப் பண்பாட்டையும் மட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாறு, சமூக நினைவு, எதிர்ப்புணர்வு மற்றும் விடுதலைச் சிந்தனை ஆகியவற்றையும் புரிந்துகொள்ள உதவுகிறது. எழுத்து வரலாற்றில் இடம் பெறாத பல மக்களின் வாழ்க்கைச் சுவடுகளை இப்பாடல்கள் பாதுகாத்து நிற்கின்றன. இவ்வகையில் நாட்டுப்புறப் பாடல்களை இலக்கிய வடிவமாக மட்டும் பார்க்காமல், சமூக வரலாற்றின் ஆவணங்களாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புக் குரல்களாகவும் அணுகுகிறது. மௌனப்படுத்தப்பட்ட மக்களின் அனுபவங்களைப் பதிவு செய்து, அவர்களின் குரலுக்கு இலக்கிய மற்றும் சமூக வெளி ஏற்படுத்தும் முக்கியத்துவத்தை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது

References

Balakrishnan, (1996) Pattukkottai Kalyanasundaram’s Songs, New Century Book House (P) Ltd., Chennai

Kavalam Vishwanatha Group. Kutta Nadindre Thanimayum Paattukalum. Kerala Sahitya Akademi, Thrissur (1989).

Kumaran Vayaleri, (2003) Dalithante Novum Ninavum Nadan Pattukalil, Pappiyon, Kozhikode.

Meyyappan, S. (2010) Bharathiyar’s Poems Thenral Nilayam, Chidambaram, India

Sivalingam, M. (2007) Malaiyaga Thamizhar Nattuppura Paadalgal, Kurinji Tamil Ilakkiya Mandram.

Sivasubramanian, A. (2016) Adiththala Makkal Varalaru, New Century Book House (P) Ltd., Chennai.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License

© The Author 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

Cite this Article

Preetha, S. Caste Oppression and Cultural Resistance in Tamil and Malayalam Dalit Folk Songs, Indian Journal of Multilingual Research and Development, Vol 7, Iss 3, (2026) 6-10. DOI: https://doi.org/10.54392/ijmrd2632